

# பனிமயம்

மே 2026


ஆண்டுச் சந்தா
ரூ. 100/-

தனிப் பிரதி
விலை ரூ. 10/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



## தொழிலாளர் நலம் காப்போம்

அன்பு மக்களுக்கு, வணக்கம்!

மே மாதம் 1ஆம் தேதியை **அகில உலக தொழிலாளர் தினம்** என்று சிறப்பிக்கின்றோம்.

படைப்பின் தொடக்கத்தில் கடவுள் கொடுத்த கட்டளை. தொநூ 3:19 - "நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய்". திருப்பாடல் 128:2இல் "உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்" என்று சொல்லப்பட்டுள்ளது. பவுலடியார் 2தெச 3:10இல் "உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது" என்று கூறியுள்ளார்.

எனவே ஒவ்வொரு மனிதனும் உழைக்கவேண்டும் என்பது இயற்கையின் நியதியாகவும் உள்ளது. அவன் என்ன தொழில் செய்கின்றான் என்பதல்ல, அவன் என்ன தொழில் செய்தாலும் அதை அவன் உண்மையோடும் நேர்மையோடும் செய்யவேண்டும். எனவேதான் நம் முன்னோர்கள் சொன்னார்கள் "கடவுள் வாழ்வது கோயிலில் மட்டுமல்ல, நாம் வேலைகள் / பணிகள் செய்யக் கூடிய இடத்திலும் தான்" என்று. அலுவலகங்களிலும், பொது நிறுவனங்களிலும், வணிகக் கூடாரங்களிலும் உழைப்பவர்களை கண்காணிப்புக் கேமரா கொண்டு கண்காணிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. மனிதனும் கண்காணிப்புக் கேமரா கொண்டு கண்காணிக்கும் மேலாளர் / உரிமையாளருக்கு பயப்படுகின்றானே தவிர தன்னுடைய மனசாட்சிக்கும், கடவுளுக்கும் அவன் பயப்படுவதில்லை.

எந்த ஒரு தொழிலையும் நாம் இழிவாக பார்க்கக் கூடாது, எந்த ஒரு தொழிலாளியையும் இழிவாக நடத்தக்கூடாது. ஒவ்வொரு மனிதனுமே மற்றொரு மனிதனைச் சார்ந்துதான் இந்த உலகத்தில் வாழ வேண்டியுள்ளது. ஒவ்வொருவருமே ஒவ்வொருவருடைய வேலைகளைச் செய்தால்தான் உலகம் சீராக இயங்கிக் கொண்டிருக்க முடியும்.

**உழைப்பை மதிப்போம், உண்மையாய் உழைப்போம்.**

**உழைப்பவரை மதிப்போம், மாண்போடு நடத்துவோம்.**

God Bless You All.



என்றும் பாசத்துடன்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை




உதயம் 27 | தாரகை 9

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருள்பணி. ஸ்டார்வின்**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்



**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 100



முகவரி : 'பனிமயம்'
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
✆ 82209 47823, www.snowsbasilica.com


## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### அனைவருக்கும் உணவு கிடைக்க...

பெரிய உற்பத்தியாளர்கள் முதல் சிறிய நுகர்வோர் வரை ஒவ்வொருவரும் உணவு வீணாக்கலைத் தவிர்ப்பதில் ஈடுபடவும், ஒவ்வொருவருக்கும் தரமான உணவு கிடைப்பதை உறுதி செய்யவும் இறைவேண்டல் செய்வோம்.

# உள்ளே...



மரியன்னையின் திருப்பெயர்கள் — 4


இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் — 6


தரிசனம் தருவாய் தாயே... — 8


இம்மாதப் புனிதர் — 11


கோடி நன்மை பெற... — 12


தொழிலாளர்களின் கனவு — 14


கனவு நனவானதோ! — 16


அன்னை மரியா - நம் வாழ்வின் முன்மாதிரி — 18


முளையிலேயே கிள்ளி எறியப்பட்ட கனவுப் பூக்கள் — 20


விவிலியப் போட்டி — 22

பனிமயப் பகிர்வு — 25

# மரியன்னையின் திருப்பெயர்கள்

## 47 அமைதியின் அரசி!



அமைதி என்றதும் உங்கள் எண்ணத்தில் தோன்றும் சொல் போர் என்பதா? அப்படியானால், நீங்கள் இன்றைய சூழலில் இருந்து வெகு தொலைவில் இல்லை. "போருக்கு ஒரு காலம், அமைதிக்கு ஒரு காலம்" (சஉ 3:8) என்கிறார் சபை உரையாளர். உலகில் போர் மேகங்கள் சூழும் போதெல்லாம், நாம் அன்னையிடம்தானே மன்றாடுகிறோம். "அமைதியின் அரசி" (Queen of Peace) என்னும் திருப்பெயர் திருத்தந்தை 15ஆம் பெனடிக்ட் அவர்களால் லொரெட்டோ மன்றாட்டு மாலையில் சேர்க்கப்பட்டது. முதலாம் உலகப் போர் (1914-1918) நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மரியன்னை வழியாக உலக அமைதிக்காக மன்றாட அழைப்பு விடுத்தார் திருத்தந்தை. சரியாகச் சொல்வதானால், 05.05.1917 அன்று இத்திருப் பெயர் சேர்க்கப்பட்டது. 11.11.1918 அன்று போர் முடிவுக்கு வந்தது. 01.12.1918 அன்று வெளியிடப்பட்ட சுற்றுமடலில் மரியன்னைக்கு நன்றி தெரிவித்த திருத்தந்தை தொடர்ந்து உலக அமைதிக்காக அன்னையிடம் மன்றாடக் கேட்டுக் கொண்டார்.

உலக அமைதிக்காக மன்றாடுமாறு திருத்தந்தை மட்டுமல்ல, அன்னை மரியாவே வேண்டுகோள் விடுத்தார் என்பது ஒரு வியப்பின் செய்தி. ஆம், 1917ஆம் ஆண்டு லூசியா, பிரான்சிஸ், ஜெசிந்தா மூவருக்கும் காட்சி தந்தபோது "உலக அமைதிக்காக நாள்தோறும் செபமாலை மன்றாடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். உலகில் அமைதி நிலவவேண்டும் என்பதற்காக மன்றாட்டும், தவமும் ஏறெடுக்கப்பட வேண்டும் என்று அன்னை தொடர்ந்து வேண்டுகோள் விடுத்துக்கொண்டே இருக்கிறார்.

உண்மையில், இயேசுதான் அமைதியின் அரசர். அவரைப் பற்றியே இறைவாக்கினர் எசாயா "அவர் திருப்பெயரோ 'வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, **அமைதியின் அரசர்**' என்று அழைக்கப்படும்" (எசா 9:6) என்று முன்னுரைத்தார். அவரைப் பற்றியே பவுலடியாரும் "அவரே நமக்கு **அமைதி** அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை, தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து, அவர்களை ஒன்றுபடுத்தினார்" (எபே 2:14) என்று எழுதினார்.

அமைதியின் அரசரான இயேசுவின் தாய் என்பதாலேயே, மரியாவை அமைதியின் அரசி என்று அழைப்பது தகுதியாகிறது. "மரியாவின் பாதுகாப்பில் வாழ்பவர் அமைதியைப் பெற்றுக்கொள்வார்" என்பது புனித அல்போன்ஸ் லிகோரியாரின் அறிவுரை. போர் மேகங்கள் உலகைச் சூழ்ந்துள்ள இன்றைய நாள்களிலும் உலக அமைதிக்காக அமைதியின் அரசியிடம் மன்றாடுவோமாக. ★



# 48 இரக்கத்தின் அன்னை!



லொரெட்டோ மன்றாட்டு மாலையில் மிகவும் அண்மையில் சேர்க்கப்பட்ட மரியன்னைத் திருப்பெயர்தான் மரியா "இரக்கத்தின் அன்னை" (Mother of Mercy) என்பது. கடந்த 20.06.2020 மரியாயின் மாசற்ற இதயவிழா அன்று திருத்தந்தை பிரான்சிஸ் "இரக்கத்தின் அன்னை", "எதிர்நோக்கின் அன்னை", "புலம் பெயர்ந்தோரின் ஆறுதல்" என்னும் மூன்று திருப்பெயர்களை இம்மன்றாட்டு மாலையில் இணைத்து உலகை வியப்படைய வைத்தார். ஏற்கனவே 2015ஆம் ஆண்டை "இரக்கத்தின் ஆண்டு" என்று அறிவித்த திருத்தந்தை பிரான்சிஸ், அதன் தொடர்ச்சியாகவே இந்த மரியன்னைத் திருப்பெயரை இணைத்துள்ளார்.

மாறும் காலச் சூழ்நிலைக்கேற்ப நாம் எதிர்கொள்ளும் புதிய வாழ்வியல், அருள்வாழ்வுச் சவால்களுக்கு எதிர்வினையாற்றும் வண்ணம் திருத்தந்தை இப்பெயர்களை மன்றாட்டுமாலையில் இணைத்துள்ளார். இன்றைய வாழ்வில் அனைவருக்கும் தேவையான ஒன்று இறைவனின் இரக்கம். அந்த இரக்கத்தை அன்னை மரியா வழியாக நாம் பெற்றுக் கொள்ளலாம் என்பதே இந்தத் திருப்பெயர் நமக்குத் தரும் செய்தி.

அன்னை மரியா இரக்கத்தின் தாய் என்னும் நம்பிக்கை திருஅவையின் மரபிலும், மன்றாட்டுகளிலும் ஊறியிருந்த ஒன்றுதான். 13ஆம் நூற்றாண்டிலிருந்து அனைத்துக் கத்தோலிக்கர்களாலும் விரும்பி மன்றாடப்படும் புகழ்பெற்ற மரியன்னை மன்றாட்டான புனித பெர்னார்தின் மன்றாட்டு "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்றுதான் தொடங்குகிறது! "வாழ்க அரசியே" என்னும் இன்னொரு புகழ்பெற்ற மரியன்னை மன்றாட்டிலும் "இரக்கம் நிறைந்த அன்னையே" என்னும் சொல் இடம் பெறுவதை நாம் அறிவோம். இருப்பினும், மன்றாட்டு மாலையிலும் இத்திருப்பெயரை இணைத்ததன் வழியாக இறைவனின் இரக்கம் என்னும் ஊற்றின் இன்னொரு வாசலைத் திறந்துள்ளார் பிரான்சிஸ் என்றே நாம் புரிந்துகொள்ளலாம்.

"மரியா கடவுளின் இரக்கம் என்னும் பெட்டகத்தைத் திறந்து தாம் விரும்புகிறவர்களுக்கெல்லாம் வாரிவழங்குகிறார்" என்று எழுதினார் புனித அல்போன்ஸ் மரிய லிகோரி. "இறை இரக்கம் என்னும் மறைபொருளை நன்றாக அறிந்தவர் அன்னை மரியாதான்" என்றார் புனித 2ஆம் ஜான் பவுல். கானாவூர் திருமணத்தின்போதே மணவீட்டாரின் இன்னலை அறிந்து பரிவுகொண்டு இயேசுவிடம் பரிந்துரைத்தவர் அல்லவா? நமக்காகவும் பரிந்து மன்றாடுவார் நம் இரக்கத்தின் அன்னை.



அருள்பணி. குமார்ராஜா

# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்

## தொழிலாளர்களின் கனவுகள்

★ "மனித உழைப்பு சுதந்திரமாக மேற்கொள்ளப்பட்டாலும் சரி, அல்லது வேலை வழங்குவாரோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யப் பட்டாலும் சரி, அது ஆள்தன்மை கொண்ட மனிதரிடமிருந்து நேரடியாக ஊற்றெடுக்கிறது. மனிதர் தம் உழைப்பால் இயற்கைப் பொருள்களின்மேல் ஒரு வகையில் தம் முத்திரையைப் பதித்து, அவைகளைத் தம் உள விருப்பத்திற்கு அடிபணியச் செய்கின்றனர்.

பொதுவாக, மனிதர் தம் உழைப்பால் தம்மையும் தம் குடும்பத்தாரையும் காப்பாற்றுகின்றனர். தம் சகோதர சகோதரிகளாகிய மனிதரோடு தம்மையே இணைத்துக்கொண்டு அவர்களுக்குப் பணி புரிகின்றனர். இதே உழைப்பால் உண்மை அன்பைச் செயல்படுத்தலாம். கடவுளது படைப்பை நிறைவுக்கு இட்டுச் செல்லும் பணியில் தம் ஒத்துழைப்பை நல்கலாம். இயேசு கிறிஸ்து நாசரேத்தில் தாமே தமது மாண்பைக் கொணர்ந்துள்ளார். எனவே, மனிதர் தம் உழைப்பைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கும்போது, உண்மையில் அதே கிறிஸ்துவின் மீட்புப் பணியுடன் இணைந்துள்ளனர் என நாம் கொள்ளுகின்றோம்.



உழைப்பிற்கு வழங்கப்படும் ஊதியம் முறையானதாக அமைய வேண்டும். அதாவது, மனிதர் தாமும் தம்மைச் சார்ந்தவர்களும் தம் வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதார, சமூக, பண்பாட்டு அருள்நெறி நலன்களைத் தகுந்த முறையில் பேணுவதற்கு இன்றியமையாதவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அந்த ஊதியம் போதுமானதாக இருக்க வேண்டும்" – இன்றைய உலகில் திருச்சபை எண். 67.

**★ மனித குலத்தின் பரந்த நாட்டங்கள்**

"மனித குலம் படைப்பின்மேல் தன் ஆதிக்கத்தை நாளும் வலுப்படுத்த முடியும். இவ்வாறு வலுப்படுத்தவும் வேண்டும் எனும் உறுதியோடு வளர்ந்து வருகிறது. மேலும், மனிதருக்கு நாளுக்கு நாள் நல்லமுறையில் பணிபுரிந்து, தனி மனிதரும் குழுக்களும் தமக்குரிய அரசியல், சமூக, பொருளாதார ஒழுங்கு



முறையை உருவாக்கிக் கொள்வது மனித குலத்தின் கடமையாகும் என்னும் உறுதிப்பாடும் வளர்ந்து வருகிறது.

இதன் விளைவாக, தாம் பெறவேண்டிய நலன்கள் நீதியின்மையாலும், சமமற்ற பங்கீட்டாலும், தம்மிடமிருந்து பறிக்கப் படுவதாகத் திட்டவட்டமாகக் கருதுபவர் பலர் அந்நலன்களைப் பெறத் தீவிரமாய்க் கோருகின்றனர். முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளும், அண்மையில் சுதந்திரம் பெற்ற நாடுகளும் இன்றையப் பண்பாட்டின் நல்விளைவுகளை அரசியல் துறையில் மட்டுமின்றி, பொருளாதாரத் துறையிலும் பெறவும், உலக அரங்கில் சுதந்திரத்தோடு பங்கு பெறவும் விரும்புகின்றன" - இ.உ.தி. எண். 9.

★ "பொருளாதார ஆக்க முயற்சிகளில் ஒன்றிணைந்து ஈடுபட்டிருப்பவர் மனித ஆள்களாவர்; அதாவது, கடவுளின் உருவில் படைக்கப்பட்ட, சுதந்திரமும் தன்னாட்சி உரிமையும் கொண்ட மனிதர்கள் பொருளாதார ஈடுபாடுகளில் ஒன்று சேர்கிறார்கள். எனவே, உடைமையாளர், வேலை வழங்குவோர், வேலை மேலாளர் மற்றும் உழைப்பாளிகள் ஆகியோர் ஒவ்வொருவரின் பொறுப்பையும் கருத்தில் கொண்டு, தொழில் மேலாண்மைக்குத் தேவையான ஒருமித்த செயல்பாட்டுக்கு ஊறு விளைவிக்காமல், தொழில் மேலாண்மையில் யாவரும் செயல்முறையில் பங்கு கொள்வதை ஊக்குவித்து, மேம்படுத்த வேண்டும். இத்தகைய பங்கேற்பு எம்முறைகளில் நிகழ வேண்டும் என்பது தகுந்த முறையில் நிர்ணயிக்கப்பெற வேண்டும். ஆனால், பொருளாதாரம் மற்றும் சமூகம் ஆகியவற்றில் தாக்கம் ஏற்படுத்துகின்ற காரியங்களைப் பற்றிய முடிவுகள் பெரும்பாலும் தொழிலகத்தில் எடுக்கப்படுவதில்லை. மாறாக, அதைவிட உயர்ந்த மட்டத்தில் உள்ள நிறுவன அமைப்புகளாலேயே எடுக்கப் படுகின்றன. இம்முடிவுகள் தொழிலாளர்களுடையவும் அவர்களது பிள்ளைகளுடையவும் எதிர்காலத்தை நிர்ணயிப்பனவாய் உள்ளன. எனவேதான், தொழிலாளர்கள் தாமே நேரடியாகவோ அல்லது தாங்கள் சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்த பதிலாளர்கள் வழியாகவோ மேற்கூறிய முடிவுகளை எடுப்பதில் செயலளவில் பங்கு கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் சுதந்திரமாகத் தமக்கெனச் சங்கங்களை அமைக்கும் உரிமை மனித ஆளுக்குரிய அடிப்படை உரிமைகளும் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இச்சங்கங்கள் உண்மையிலேயே தொழிலாளர்களின் கருத்துகளை எடுத்துரைக்க உரிமை கொண்டனவாகவும், பொருளாதார வாழ்க்கையைச் சரியான முறையில் அமைக்க உதவக்கூடியனவாகவும் இருக்க வேண்டும்" - இ.உ.தி. - 68.

*தொகுத்தளிப்பவர் :*

**கலாபன் வாஸ்**

## *வரவேற்கிறோம்*



### திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 6. | ஜிஸல் | சைமன் அமிரோ - டனிஷா | 19.04.2026 | செபஸ்தியார் |
| 7. | சியோன் | லேக்மேன்- ஸ்னோபா | 19.04.2026 | பொம்பெய் மாதா |

# தரிசனம் தருவாய் தாயே...

## மரியன்னை காட்சிகள் பற்றிய தொடர் 9



"மலையுச்சிக்குப் போ" என்ற மாதாவின் வார்த்தைகள் யுவானின் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டே இருந்தன. மகிழ்ச்சியான மனதோடு அன்னை காட்டிய இடத்திற்குச் சென்றார்.

முதல்முறையாக அன்னை காட்சியளித்த உச்சிப் பகுதியை அடைந்த யுவான் டியேகோ ஒரு நிமிடம் உறைந்து போனார். அவரது கண்கள் இமைக்க மறந்து நிலைத்து நின்றன. அங்கு ஏராளமான காஸ்டிலியன் வகை ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்கின. அந்த இடமே ரோஜா மலர்களின் நறுமணத்தால் நிறைந்திருந்தது. ஸ்பெயின் நாட்டில் இதமான தட்பவெப்ப சூழலில் மட்டுமே பூக்கும் பூக்கள் அவை.

ரோஜா மலர்களிலேயே உயர்ந்த வகையைச் சார்ந்தவை அவை. உடல் நடுங்கும் குளிரில், எந்தப் பூக்களும் பூக்க வாய்ப்பே இல்லாத கடுங்குளிர் காலத்தில், அதுவும் கற்களும் முட்களும் நிறைந்த வறண்ட மலைப்பகுதியில் எப்படி இவ்வளவு பூக்கள் பூத்துக் குலுங்க முடியும்? அன்னையின் ஆற்றலை எண்ணி வியந்த யுவான் ஒவ்வொரு மலராகப் பறித்துத் தன் தில்மா என்னும் மேலாடையில் அவற்றை அடுக்கத் தொடங்கினார். தன்னால் முடிந்த அளவு பூக்களைச் சேர்த்த பின்னர், மலையில் இருந்து இறங்கத் தொடங்கினார்.

காட்சி தந்த அதே மலையடிவாரத்தில் அன்பின் முழு வடிவமாக நின்று கொண்டிருந்தார் அன்னை. யுவானை நோக்கி, "யுவானிட்டோ, என் அன்பு மகனே, இப்போது இந்த மலர்களைக் கொண்டுபோய் ஆயரிடம் காண்பி. நான் கடவுளின் தாய் என்பதற்கும்,



இந்த இடத்தில் ஆலயம் கட்டப்படவேண்டும் என்பது என் விருப்பம் என்பதற்கும் அடையாளமாக இம்மலர்கள் திகழும். இதைப் பார்த்த பிறகு ஆயரும், மற்றவர்களும் நிச்சயமாக உன்னை நம்புவார்கள். கவலையை விடு. ஒன்றை மட்டும் நினைவில் கொள். உன் மேலாடையில் நீ வைத்துள்ள இம்மலர்களை ஆயரிடம் மட்டும் காட்டு. வேறு எவரிடமும் காட்ட வேண்டாம்" விரைவாகப் பேசி முடித்தார் அன்னை. மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்த யுவான் அன்னையின் சொற்படியே செயல்பட விரைந்து சென்றார்.

அது அதிகாலை நேரம். இன்னும் ஆயர் இல்ல அலுவலகங்கள் செயல்படத் தொடங்கவில்லை. பணியாளர்கள் மட்;டுமே தங்கள் வழக்கமான கடமைகளைச் செய்து கொண்டிருந்தனர். தூக்கக் கலக்கத்தில் இருந்த யாரும், யுவானைக் கொஞ்சமும் கண்டு கொள்ளவில்லை. ஆனால் யுவானுக்கு எந்தக் கவலையுமில்லை. வழக்கமாக இருக்கும் சோர்வும் இல்லை. ஆயர் கேட்ட அடையாளத்தைக் கொண்டு வந்துவிட்டேன், இனி ஆயர் என்னை சந்தேகமில்லாமல் நம்புவார் என்றப் பெருமிதம் மட்டுமே இருந்தது.

கொஞ்சம் கொஞ்சமாகப் பணியாளர்கள் யுவானைக் கவனிக்கத் தொடங்கினர். அவரது மேலாடையிலிருந்து வந்த ரோஜா மலர்களின் நறுமணம் அவர்களை யோசிக்க வைத்தது. ஒருசிலர் நெருங்கி வந்து யுவானின் மேலாடையில் இருப்பதைப் பார்க்க முயன்றார்கள், முடியவில்லை. ரோஜா மலர்களின் படம் மட்டுமே அவர்களுக்குத் தெரிந்தது. அதிர்ச்சியில் உறைந்த அவர்கள் ஆயரிடம் தகவல் சொன்னார்கள். கொஞ்ச நேரத்திலேயே ஆயரின் அறைக்குள் யுவான் அழைக்கப்பட்டார். உள்ளே நுழைந்த யுவான் வழக்கம்போல ஆயருக்கு வணக்கம் செலுத்தினார். அன்னை சொன்ன செய்திகளை உற்சாகத்துடன் விவரித்தார்.

"வணக்கத்திற்குரிய ஆயர் பெருந்தகையே, ஆண்டவரின் தாய் அற்ப மனிதனாகிய என்னைத் தன் திருவுளம் நிறைவேறுவதற்காக தேர்வு செய்திருக்கிறார். நீங்கள் கேட்ட அடையாளத்தை அந்தத் தாய் தன் ஆற்றலால் தந்துவிட்டார். இதோ, அவற்றைப் பாருங்கள்" என்று சொன்னவாறே தன் மேலாடையைத் திறந்தார் யுவான்.

நறுமணம் வீசும் காஸ்டிலியன் ரோஜாக்கள் கீழே விழுந்தன. அந்த மலர்களின் மணம் அந்த அறையை மட்டுமன்றி, ஆயரின் அரண்மனை முழுவதையும் நிரப்பியது. என்ன நடக்கிறது என்ற கேள்வியுடன் பணியாளர்களும் ஆயரின் அறைக்கு ஓடி வந்தார்கள். ரோஜா மலர்களின் ஒவ்வொரு இதழிலும் அன்னையின் அழகு முகம். அதுமட்டுமல்லாமல், யுவானின் தில்மா மேலாடையில் அவருக்குக் காட்சி தந்த குவாதலூப்பே அன்னையின் திருவுருவம் மிக அழகாக வரையப்பட்டிருந்தது.

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை வியர்த்துக் கொட்டியது, ஆயர் சுமராகாவிற்கு. நடுங்கிய தன் கைகளைக் கூப்பியவாறே யுவானுக்கு முன்பாக முழந்தாளிட்டார் ஆயர். "அம்மா, என் அன்புத் தாயே, உன்னையா சோதித்துவிட்டேன்? உன் வார்த்தைகளையா நம்ப மறுத்து அடையாளம் கேட்டேன்? அய்யோ, பெரும்பாவம் செய்துவிட்டேனே!" கண்களில் நீர் ததும்ப அழவும், செபிக்கவும் செய்தார் ஆயர்.

யுவானின் கைகளைப் பற்றிக் கொண்டார். அவரை ஆரத்தழுவினார். "என்னை மன்னித்துவிடு மகனே! அன்னையின் அருள்பெற்ற அற்புத மனிதனாகிய உன்னை நான் உதாசீனப்படுத்திவிட்டேன். உன்னிடம் மிக மோசமாக நடந்து கொண்டேன். என்னை மன்னித்துவிடு". கண்ணீரைத் துடைத்து எழுந்த ஆயர், யுவான் அணிந்திருந்த, அன்னையின் திருவுருவம் பொறித்த தில்மா

மேலாடையை மிகுந்த வணக்கத்துடன் எடுத்துத் தன் சிற்றாலயத்தில் கொண்டுபோய் வைத்தார்.

உடனடியாக ஆயரும் மற்றவர்களும், அன்னை காட்டிய இடத்தைப் பார்ப்பதற்காக யுவான் டியேகோவோடு புறப்பட்டனர். மெக்சிகோவிலிருந்து ஆயர் இல்ல அலுவலர்கள் அனைவரும் இப்போது யுவானின் சொற்களைக் கேட்டு அமைதியாக அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். மகிழ்ச்சியோடு அவர்களை தெப்பியக் மலைக்குக் கூட்டிச் சென்றார், யுவான். மலையில் அன்னைக்கு ஆலயம் கட்டப்பட வேண்டிய இடத்தைக் காட்டினார். சந்தேகம் சிறிதுமின்றி, அமைதியாகக் கேட்டுக் கொண்டனர், ஆயரும் மற்றவர்களும்.

உடனடியாகத் திட்டம் தீட்டப்பட்டது. பிரம்மாண்டமான பேராலயம் ஒன்று கட்டப்படும் வரை தற்காலிகமாகச் சிற்றாலயம் ஒன்றைக் கட்டலாம் என்று ஆலோசனை சொன்னார் ஆயர். அன்னை விரும்பியபடி ஆலயத்தைக் கட்டிவிடுவார்கள் என்ற நம்பிக்கையோடு, தனக்கு அன்னை கொடுத்த பணியை முடித்துவிட்ட மகிழ்ச்சியும் யுவானின் முகத்தில் தென்பட்டது. ஆனால், உண்மையில் அன்னை யுவானுக்குக் கொடுத்த பணி முடியவில்லை. இன்னும் ஒரு வேலை மிச்சமிருந்தது. அது என்ன? அறிந்துகொள்ளக் காத்திருங்கள், அடுத்த இதழ் வரை.



அருள்பணி.
க.செ. பிரவீன் ராசு




**அடுத்த மாத இதழ்,**
**"கல்வி"**
**எனும் தலைப்பில்**
**மாணவர் சிறப்பிதழாக**
**வெளிவருகின்றது.**
**படைப்புகள்**
**வரவேற்கப்படுகின்றன.**

## வாழ்த்துகின்றோம்

### புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 6. | மேரி மனோ ரெனிஷா | ரெனி கோமஸ் - ஷர்மிளா | 18.04.2026 | ஜூடு |



# இம்மாதப் புனிதர்

## புனித தொமினிக் சாவியோ



தொமினிக் சாவியோ வட இத்தாலியில் முரியால்டோ என்ற ஊரில் 1842ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் தேதி பிறந்தார். இவருடைய தந்தை சார்லஸ் சாவியோ. தாய் பிரிஜித்.

இவர் சிறுவயது முதலே ஆண்டவர் இயேசுவிடமும் அன்னை மரியாவிடமும் அளவுகடந்த அன்பு கொண்டிருந்தார். இவர் நான்கு வயது முதலே தனியாக இறைவேண்டல் செய்யும் அளவிற்கு தன்னை இறைவனில் ஒன்றித்துக்கொண்டார்.

தொமினிக் சாவியோ, தான் முதன் முறையாக நற்கருணை உட்கொண்ட நாளை குறிப்பிடும்போது, "வாழ்வின் மிகவும் மகிழ்ச்சியானதும் அற்புதமானதுமான நாள் அது" என்பார்.

இவர் ஆலயத்தில் பீடச்சிறுவனாக பணி செய்தார். மழையிலும் குளிரிலும் ஆலயத்திற்கு தவறாமல் செல்லும் பழக்கம் கொண்டவர். தன்னோடு பழகிய நண்பர்கள் கெட்டவார்த்தை பேசும்போது அவர்களை கண்டித்துத் திருத்தினார். தவறான வழியில் செல்லும் சிறுவர்களுக்கு அறிவுரை கூறினார். பாவம் செய்வதைவிட சாவதே மேல் என்று அடிக்கடி சொல்வார்.

தொமினிக் சாவியோ 12 வயதை அடைந்த போது, குருமடத்தில் சேர்ந்தார். புனித ஜான் போஸ்கோவின் வழிகாட்டுதலின்பேரில், இறைவனுக்கு உகந்த வாழ்வு வாழ்ந்து வந்தார். புனித ஜான் போஸ்கோவிடம் சென்று, "நான் ஒரு துணி. என்னை இறைவனுக்கு உகந்த ஆடையாக மாற்றிக் கொடுங்கள்" என்றார்.

தொமினிக் சாவியோ 14 வயதை அடைந்த போது, உடல்நலம் பாதிக்கப்பட்டு பலவீனம் அடைந்தார். 1857ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் தேதி தொமினிக் சாவியோ இறக்கும் தருவாயில் விண்ணகக் காட்சி கண்டார். அந்தக் காட்சியினால் மிகவும் பேருவகைக் கொண்டு "ஆகா, எவ்வளவு இன்பம் நிறைந்த அற்புதக் காட்சி" என்று கூறியவாறே உயிர் துறந்தார்.

தொமினிக் சாவியோவின் வாழ்க்கை வரலாற்றை புனித ஜான் போஸ்கோ எழுதினார். இது இவரது புனிதர் பட்டமளிப்பு நடவடிக்கைகளில் முக்கிய ஆதாரமாக விளங்கியது. தொமினிக் சாவியோவின் புனிதர் பட்டமளிப்பு நடவடிக்கையைத் தொடங்கிவைத்த அப்போதைய திருத்தந்தை 10ஆம் பத்திநாதர், தொமினிக் சாவியோ என்னும் இளைஞர், தான் திருமுழுக்கில் பெற்ற புனிதத்தைப் பழுதின்றி காப்பாற்றிக் கொண்டார் என்று இவரைப் பற்றி புகழ்ந்து பேசினார்.

1933ஆம் ஆண்டு இவருக்கு வணக்கத்துக்குரியவர் பட்டம் வழங்கிய திருத்தந்தை 11ஆம் பத்திநாதர், தூய்மை, பக்தி, ஆன்மீகத் தாகம் ஆகியவற்றின் மூலம் நமக்கு முன்மாதிரியாக உள்ளார் என்று கூறினார்.

திருத்தந்தை 12ஆம் பத்திநாதர், இவருக்கு 1950ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் தேதி அருளாளர் பட்டமும், 1954ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் தேதி புனிதர் பட்டமும் வழங்கினார்.



**அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்**

# கோடி நன்மை பெற...



மே மாதம் - மரியன்னையின் வணக்க மாதம். அன்னை மரியா சூடியிருப்பது விசுவாசத்தின் மணிமகுடம். எனவேதான் கோடை வெயிலில் கோடி நன்மை பெற மே மாதம் முழுவதும் அன்னையின் மாதமாகத் திருச்சபைக் கொண்டாடி மகிழ்கின்றது.

அன்னை என்றாலே அன்பைப் பொழிந்து அரவணைப்பவள். அழுகின்ற குழந்தையின் குரல் ஒலி கேட்டு விரைந்தோடி அமுதூட்டி சீராட்டித் தாலாட்டி ஆறுதலையும், அன்பையும் அளிப்பவள். அன்னை மட்டுமே. 'தான்', 'தனது' என்று எண்ணாது தன் உயிரையும் கூடத் தனது பிள்ளை நலமுடன் வாழத் தியாகமாக்கிடத் தயங்காதவள். இத்தகு தியாகமிகு உள்ளம் கொண்டவரே அன்னை மரியா!

இவர் இயேசுவுக்கு மட்டும் தாயல்ல, நம் அனைவரின் தாயுமானவர். இயேசுவின் இன்ப-துன்பங்களில் அவரின் தாய் அன்னை மரி உடனிருந்து ஊக்குவித்து இறைத் திட்டத்தினை ஏற்று என்றுமே இறைவனோடு இணைந்து வாழ வழி காட்டியவர். அந்த அன்னை மரியா நம் தேவைகளில் நமக்காகப் பரிந்து பேசி இறைவனிடமிருந்து அருளையும், ஆசீரையும் பெற்றுத் தருகிறார். அன்னையின் உள்ளம் மானுடத்தின் மீது எப்போதும் எப்படி அன்பைப் பொழிகிறது என்பதற்கு இந்தக் கதை விடை சொல்லும் .

ஒரு நாட்டின் அரசர் தன்னுடைய மக்களில் சிறந்த பொதுநல உள்ளம் கொண்டவரை கண்டறிய விரும்பினார். அதனால் அந்நகரத்தின் முக்கிய சாலையின் நடுவே ஒரு பெரிய கல்லை வைத்துவிட்டு அவருடைய படைவீரர்களோடு அருகே ஒளிந்து கொண்டார். பலரும் அவ்வழியே சென்றார்கள், அந்தக் கல் இருப்பதை பார்த்து ஒதுங்கிச் சென்றுவிட்டார்கள். இன்னும் சிலரோ அந்த கல்லை யார் இங்கு வைத்தது என்று புலம்பிக் கொண்டே சென்றார்கள். அதில் ஒரு சிலர் இந்த கல்லை ஒரு ஓரம் நகர்த்தினால் நன்றாக இருக்கும் என பேசி அதை நகர்த்தாமலே சென்றுவிட்டார்கள்.

அவ்வழியே காய் மூட்டையை முதுகில் சுமந்து வந்த விவசாயி மட்டும் அந்தக் கல்லை பார்த்துவிட்டு, தன் சுமையான காய் மூட்டையை இறக்கி வைத்துவிட்டு கல்லை ஓரம் நகர்த்துவதற்காக முயற்சித்தார். அது அவரால் முடியவில்லை இருப்பினும் விடாமுயற்சியோடு அதை சாலையின் ஓரம் ஒதுக்கினார். அப்போது ஒளிந்திருந்த அரசரும் அவருடைய படைவீரர்களும் அவரைப் பாராட்டி அவருக்கு பொற் காசுகளைப் பரிசாகக் கொடுத்தார்கள். வாழ்வின் சுமைகளை கையாளும் நான்கு வகையான மனிதர்களை சுட்டிக் காட்டுகிறது இந்தக் கதை.

1. சுமைகளே இல்லாமல் மகிழ்வோடு வாழ நினைப்பவர்கள். (கதையில் கல்லைப் பார்த்துவிட்டு ஓரம் ஒதுங்கிச் சென்றவர்கள்)
2. சுமைகளைக் கண்டு புலம்பி அதை ஏற்காமல் வாழ்பவர்கள். (கதையில் யார் இந்தக் கல்லை சாலையில் போட்டது எனப் புலம்பிவிட்டு சென்றவர்கள்)



3. சுமைகளை ஏற்க நினைத்து ஏற்காமல் வாழ்பவர்கள். (கதையில் கல்லை புரட்டி ஓரம் நகர்த்தினால் நன்றாக இருக்கும் எனப் பேசிவிட்டு அதை நகர்த்தாமலே சென்றவர்கள்)

4. சுமைகளை ஏற்று அனைவரின் வாழ்வையும் சுகமாக்கியவர்கள். (கதையில் காணும் விவசாயியைப் போல எத்தகைய சுமை இருந்தாலும் அதை சுமந்து பரிசு பெற்றவர்கள்).

"பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்ப வர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத் 11:28) என்னும் இயேசுவின் வார்த்தைக்கு உயிரோட்டம் தருபவள் அன்னை மரியா. .அன்னை மரியா நமது பாவச் சுமையை சுமந்த இயேசுவைக் கருவில் சுமந்தவள் . ஏழு வியாகுலங்களை நெஞ்சில் சுமந்தவள். சிலுவைப் பாதையின் வலிகளை தாயாக தாங்கியவள். அவருக்கு நமது உடல் சுமைகள் (நோய்கள்), உள்ள சுமைகள் (கவலைகள், துன்பங்கள்), உறவு சுமைகள், பொருளாதார சுமைகள், ஆன்மீக சுமைகள் (பாவ நாட்டங்கள்) சொல்லாமலே தெரியும்.

பனிமயத் தாயின் பாதம் தேடி வந்து, அவள் வழியாக இயேசுவின் பாதம் சரணடைந்தோர் இறை உறவிலிருந்து நம்மைப் பிரித்தெடுக்கும் பாவங்களை அவரில் அர்ப்பணித்து மன்னிப்பைப் பெற்று சுகமான ஒரு வாழ்வை நோக்கி பயணப் படுகின்றனர். அப்படி பயன்படுவோருக்கு அன்னை தந்த வழிகாட்டி ஜெபமாலை.

புனித சுவாமிநாதர் ஒரு காட்டிற்குள் சென்று மூன்று நாட்கள் கடும் தவம் செய்து இடைவிடாது செபத்தில் ஈடுபட்டிருந்தார். அப்போது அன்னை அவரிடம் 'நீர் போதனை செய்யும்போது மக்கள் செபமாலை செபிக்கும்படி சொல்லும்' என்றார்கள். இந்த காட்சியின்போதுதான் செபமாலை செபிப்பது எப்படி என அன்னை கற்றுக் கொடுத்தார்கள். லூர்து நகரில் பெர்நதெத்துக்கு காட்சி கொடுத்தபோது அன்னை கையில் செபமாலை வைத்திருந்தார்கள்.

முதிர் வயதில் கருவுற்ற எலிசபெத்தம்மாள் தன்னை சந்திக்க வந்த அன்னை மரியாவை "'ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? ஏனென்றால் இயேசுவைத் தாங்கியுள்ள நீர் பேறுபெற்றவள்" என வாழ்த்தும் போதுதான் தூய ஆவியாரால் நிரப்பப்பட்டார் என திருவிவிலியம் சொல்கிறது.

.'அன்னை மரியாவின் வணக்கத்துக்குத் தான் என்ன வல்லமை! அது நமக்கு ஆனந்தத்தை அளிக்கும். பரிசுத்த ஆவியைக் கொடுக்கும். இறைவனுடைய மறைபொருள்களை நமக்கு வெளிப்படுத்தும். மனித இயல்பு கொண்ட உடல் உண்டென்றால், ஆவிக்கு உரிய உடலும் உண்டு (1கொரி 15:41) என்ற பவுலடியாரின் வாக்கின்படி மனித உடலில் புனிதமும், செபமும் கலந்து இறைத் திட்டத்தை ஏற்று வாழ்ந்தவர் அன்னை மரியா.

அன்னை மரியா தன் ஒவ்வொரு செயலிலும் இறைத்திட்டத்தை நிறைவேற்றியவர். நீங்கள் உண்டாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் கடவுளுடைய மாட்சிக்கே செய்யுங்கள் என்ற இறைவார்த்தையின்படி வாழ்ந்தவர் அன்னை மரியா.

எனவே அன்னை மரியின் பக்தர்களாகிய நாம் அன்னையோடு இணைந்து செபமாலை சொல்வதன் மூலம் புதுவாழ்வு பெற்று தூய ஆவியால் நிரப்பப்பட்டு ஆவியின் கனிகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் ஆகிய பண்புகளைப் பெற்று இயேசுவின் சாட்சிகளாய் ஒற்றுமையாய் வாழத் துணிவு பெறுவோம் .



**முனைவர். சி. ஜாக்சன்**

# தொழிலாளர்களின் கனவு



உடலினை இயந்திரமாக்கி, உழைப்பினை உரமாக்கி, உலகத்தை இயக்க வைக்கும் தொழிலாளர்களின் கடின உழைப்பே நாட்டின் முன்னேற்றத்திற்கு காரணமாக உள்ளது.

*“கடின உழைப்பு எப்போதும் பயன் தரும்; வெறும் பேச்சினால் வருவது வறுமையே”* (நீமொ 4:23)

தொழிலில் ஏற்றத் தாழ்வு கிடையாது. சேற்றில் இறங்கி உழைப்பவர்களும் உலைக்களத்தில் நெருப்பில் வெந்த சம்மட்டி அடிப்பவர்களும் சாக்கடையில் சுத்தம் செய்பவர்களும் வேகாத வெயிலில் பாரவண்டி இழுப்பவர்களும் இழிவான தொழிலாளியாகக் கருத முடியாது. ஒருநாள் அவர்களின் உழைப்பு இல்லையென்றால் நாடே ஸ்தம்பித்து விடும். விவசாயிகள் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் இவர்களால்தான் நாடும் வீடும் தூய்மையடைவதோடு, வளமும் அடைகிறது.

18-19 ஆம் நூற்றாண்டுகளில் தொழிலாளர்கள் பலரும் 12-18 மணி நேரம் வேலை செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர். இதற்கெதிராக பல நாடுகளில் எதிர்ப்பு ஏற்பட்டு இங்கிலாந்தில் 10 மணி நேர வேலைக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1889 இல் பிரான்சில் கூடிய கூட்டத்தில், 1890 மே 1ஆம் நாள் அனைத்துலக அளவில் இயக்கங்கள் நடத்திட அறைகூவல் விடப்பட்டது. அந்த அறைக்கூவலே மே மாதம் முதல் நாள் தொழிலாளர்கள் தினமாகக் கொண்டாட காரணமாக இருந்தது.. வியர்வை சிந்தும் தொழிலாளர்களை உற்சாகப் படுத்துவது மே தினம். பல சட்டங்களும் இயற்றப்பட்டன. 1950 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்பின் 14வது பிரிவு - சட்டத்தின் முன் அனைவரும் சமம். 15வது பிரிவு - வேலை வாய்ப்புகளில்

பணி நியமங்களில் குடிமக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டக்கூடாது. பிரிவு 16 - அரசின் கீழ் வேலைவாய்ப்பு அல்லது நியமனத்திற்கான சம வாய்ப்பு, பிரிவு 19 - தொழிற்சங்கங்கள் உருவாக்க உரிமை உண்டு. பிரிவு 39d - ஆணுக்கும் பெண்ணுக்கும் சம ஊதியம் என்றும் கூறுகிறது.

2015-2019 - நான்கு ஆண்டில் தொழில் அதிபர்கள் மற்றும் தொழில் துறையில் சேர்ந்தவர்கள் சேர்ந்து ஆலோசனை செய்து சில சட்டங்களை மாற்றி புதிய தொழிலாளர்கள் சட்டங்களை வெளிவிடுவதாக தொழில்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.. அவை தொழிலாளர்களின் கனவை நனவாக்குமா? அல்லது மழுங்க செய்யுமா? என்பது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தொழிலாளர்களின் ஒற்றுமை ஒன்றே தொழிலாளிவர்க்கத்திற்கு மூலதனமாக விளங்கும். சுயநலமும் சுயலாபமும் எண்ணாத தொழிலாளிகள் பெருக வேண்டும். வாழ்வில் உயர, பேராசையால் குறுக்கு வழியில் (ஏமாற்றுதல், ஊழல், லஞ்சம்) பணம் சம்பாதிப்போர் அமைதியின்றி அழிவை அடைவர்.

*"கடவுளுக்கு அஞ்சி நடப்போர் எதை விரும்புகின்றனரோ, அது அவர்களுக்கு கிடைக்கும்"* (நீமொ 10:24).

விடாமுயற்சி, அயராத உழைப்பு, தன்னம்பிக்கை, திட்டமிடல், பொறுமை, நேர்மை இவற்றோடு இறைத்தேடல் இருக்கும்போது வெற்றியும் உயர்வும் நிறைந்த வாழ்வும் கிடைக்கும் என்பது உறுதி. மனித உழைப்பை ஒரு வியாபாரப் பொருளாகக் கருதுவதும், மனிதரை மதிக்காமல், உழைப்பிற்கேற்ற ஊதியம் தராமல் அடிமையாக, அதிகமாக வேலை வாங்கும் முதலாளித்துவ நிலை மாறி, உழைப்பிற்கேற்ற ஊதியம் உடனுக்குடன் பெறும் நிலை உருவாக வேண்டும்.

*"தேவையில் உழல்வோருக்குப் பகிர்ந்து கொடுக்க தங்களிடம் பொருள் இருக்கும் வகையில் தாங்களே தங்கள் கைகளால் நேர்மையோடு பாடுபட்டு உழைக்கட்டும்"* (எபே 4:28).

தொழிலதிபர் ரத்தன் டாடா தன் உழைப்பாலும் முயற்சியினாலும் முன்னேறியதோடு, தன்னிடம் உள்ள தொழிலாளர்களின் தேவையறிந்து, உதவியதால் மக்களின் மனதிலும் நீங்கா இடம் பிடித்தவர்.

*"எவ்வகை பேராசைக்கும் இடங் கொடாதவாறு எச்சரிக்கையாக இருங்கள்; மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்து விடாது"* (லூக் 12:15).

1955ஆம் ஆண்டு திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் தொழிலாளர்களின் பாதுகாவலராக புனித யோசேப்பை (சூசையப்பர்) அறிவித்து மே மாதம் முதல் நாளைச் சிறப்பு செய்தார். புனித யோசேப்பின் நேர்மை, அமைதி, பொறுமை, உழைப்பு அவரை இறைமகனின் வளர்ப்பு தந்தையாக உயர்த்தி, மீட்பின் திட்டத்தில் இடம் பெறச் செய்தது. அன்னை மரியாவும், யோசேப்பும் ஒருவரையொருவர் புரிந்து அன்பினால் பிணைக்கப்பட்டு, எளிமையாக வாழ்ந்ததால் அக்குடும்பம் திருக்குடும்பமாகத் திகழ்ந்தது.

இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படைத்த தொழிலாளர்களாகிய நம் கனவு நனவாகும். தகுதிக்கு ஏற்ற வேலை, வேலைக்கேற்ற ஊதியம் பெற்று, மனநிறைவோடு வாழும் வரம் பெறுவோம்!



**ரோஸ் சேவியர்**

# கனவு நனவானதோ!



"டேய்! முதலாளி வந்துட்டார்" எனத் தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு ஒதுங்கி நிற்க, படகுக் காரில், தனக்கு சொந்தமான 'அன்னை ரெடிமேட் ஏற்றுமதி தொழிற்சாலை'க்குள் நுழைந்த ஜோசப், தனது அலுவலக அறைக்குள் சென்று நாற்காலியில் அமர்ந்து, எல்லா தொழிலாளர்களையும் அழைத்தான். அவர்களும் அவன்முன் பணிவுடன் கைகட்டி நின்றனர்.

"இந்தாங்கப்பா, தொழிலாளர் தினம் வருகிறதில்லையா? அன்று விடுமுறையுடன், உங்கள் குடும்பத்துடன் அந்நாளை மகிழ்வுடன் கொண்டாட ஒரு மாதச் சம்பளம் "போனஸ்' ஆகத் தருகிறேன். நம்ம தொழிற்சாலை இந்த அளவு உயர்ந்ததற்குக் காரணம் உங்க கடுமையான உழைப்புதானே! அதை நான் மறக்கலாமா?" என்று கூறிக் கொண்டே பண உறைகளை ஒவ்வொருவருக்கும் கொடுத்தான். "தங்கமான முதலாளி! நாம இவர்கிட்ட வேல பார்ப்பதற்கு கடவுளுக்கு நன்றி சொல்லணும்" என்று பெரியவர் ஒருவர் ஆரம்பிக்க, அதைத் தொடர்ந்து கைகளைத் தூக்கி கோஷமிட்டனர்.

"வாழ்க! வாழ்க!" எனக் கையைத் தூக்கிக் கத்திக்கொண்டே கட்டிலிலிருந்து கீழே விழுந்த ஜோசப்பை தூக்கத்திலிருந்து எழுப்பினாள் மனைவி வெண்ணிலா. "என்னங்க! விடிஞ்சிட்டு. கனவு கண்டுக்கிட்டிருக்காம எழும்பி தொழிற்சாலைக்கு வேலைக்குப் போக தயார் பண்ணுங்க" சிரித்தாள் வெண்ணிலா.

"ஐயயோ! கனவா.... அப்ப... நான் முதலாளி இல்லையா... இன்னும் தொழிலாளிதானா!" திருதிருவென முழித்துக்கொண்டே விழித்தெழுந்தான் ஜோசப்.



தன் கனவை மனைவியிடம் விளக்கியவன், “வெண்ணிலா, தலைமுறை தலைமுறையா தொழிலாளியாத்தான் இருக்கோம். எனக்கும் முதலாளி ஆகணும்னு ஆசையா இருக்கு. அதுவும் தொழிலாளர்களின் கடின உழைப்பில் சொகுசு வாழ்க்கை வாழணும்னு ஆச இல்ல. கடினமா உழைக்கணும். நம்மகிட்ட வேலை பார்க்கிறவங்களுக்கும் நம்ம லாபத்தைப் பகிர்ந்து கொடுக்கணும். நமக்குன்னு ஒரு சொந்த வீடு. பிள்ளைகளுக்கு தரமான கல்வியைக் கொடுத்து, அவர்களுக்கு மற்றவர்கள் முன்னால் மதிப்பான எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கணும்னு தான் ஆசப்படறேன். இதெல்லாம் கனவுல மட்டும்தான் நடக்குமா?” பெருமூச்சுவிட்டான்.

கவலப்படாதீங்க. உங்க கனவும், ஆசையும் நியாயமானதுதான்.. நிச்சயம் கடவுள் இரக்கம் காட்டுவார். பழைய ஏற்பாட்டில யாக்கோபின் மகன் சூசை, அரசருடைய கனவை விளக்கி எகிப்துக்கு அதிபதியானார். புதிய ஏற்பாட்டில், **நம் தொழிலாளர்களின் பாதுகாவலர் சூசையப்பர்** கனவுல, வானதூதர் மூலமா தெளிவடைந்து, மாதாவைப் பற்றி அறிந்து ஏற்றுக்கொண்டு மீட்பின் திட்டத்திற்கு துணை புரிந்து இறைமகன் இயேசுவுக்கே வளர்ப்புத் தந்தையானார். புனித சூசையப்பர்கிட்ட உங்க ஏக்கத்தை எடுத்து வைங்க. நிச்சயம் நாமும் ஒருநாள் முதலாளி ஆகலாம். மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் தினமும் தனக்கு ஏற்படும் பிரச்சனைகளை எழுதி உறங்கும் சூசையப்பர் சுரூபத்தின் அடியில் வைப்பாராம். பிரச்சனைகள் எல்லாவற்றுக்கும் உடனே நல்ல தீர்வு கிடைக்குமாம். நாமும் நம்ம கஷ்டத்தை சூசையப்பரிடம் சொல்வோம்”. வெண்ணிலாவின் ஆறுதல் மொழிகள் அவன் மனதைத் தெளிவுபடுத்த, தான் வேலை பார்க்கும் ரெடிமேட் ஏற்றுமதி தொழிற்சாலைக்குப் புறப்பட்டான். இருவருமே புனித சூசையப்பரிடம் நம்பிக்கையோடு செபித்தார்கள்.

ஒரு சில மாதங்கள் கடந்தன. அவர்கள் தொழிற்சாலையில் ஏற்றுமதிக்கு அனுப்பியது போக, மீதி ஆடைகள் இருப்பு ஆடைகளாக மிகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. வாடகைக்கு ஒரு கடையை அமர்த்தி, அந்த ஆடைகளை வாங்கி சிறிதளவு லாபத்தில் விற்றான். கடையில் கூட்டம் குவிந்தது. கடையைப் பெரிதாக்கினான். நிறைய ஆடைகளை வாங்கி விற்றான். தனக்குக் கீழ் தொழிலாளர்களை அமர்த்தி, அவர்களின் உணர்வுகளை மதித்து, அவர்களுடன் சமமாகப் பழகி, தகுதியான சம்பளமும், இலாபத்தில் பங்கும் அளித்தான்.

**குறைந்த இலாபம் - நிறைய விற்பனை** என்ற கோட்பாடு ஜோசப் குடும்பத்தாருக்கு மிகப் பெரிய மன நிறைவைத் தந்தது. கோடிக் கோடியாக பணம் சம்பாதிக்கா விட்டாலும், மகிழ்ச்சி நிறைந்த வாழ்வாக அவர்கள் கனவு நனவாகியது.



**ரெஜினா கிரகோரி**

## ஆசி கூறுகின்றோம்



## திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 7. | ஜெஸ்வந்த் மோத்தா - மரிய ஸ்னோபா நிவேதா | பொம்பெய் மாதா | 13.04.2026 |
| 8. | சீனிவாசன் - இன்ஃபன்ட் ஸ்டெஃபானா | குழந்தை இயேசு | 29.04.2026 |

# அன்னை மரியா - நம் வாழ்வின் முன்மாதிரி



"நான் யாராக இருக்கிறேன் என்பது கடவுள் எனக்குத் தந்த பரிசு; நான் எப்படி இருக்கிறேன் என்பது நான் கடவுளுக்குத் தரும் பரிசு."

கத்தோலிக்கத் திருஅவையில் அன்னை மரியாவுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புகளைப் பட்டியலிட்டு அடக்க யாராலும் முடியாது. கத்தோலிக்கத் திருஅவையையும் அன்னை மரியாவையும் யாராலும் பிரிக்க முடியாது. ஆண்டவர் இயேசுவுக்கு அடுத்தபடியாக எண்ணமுடியாத அளவுக்கு பெயர்களும் பட்டங்களும் இந்த அன்னைக்கு உண்டு. பொதுவாகவே திருஅவையில் அன்னையைப் பற்றிப் பேசும்போது அன்னை கடவுளால் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர், அன்னைக்குக் கிடைக்கும் இவ்வளவு மாட்சிக்கும் காரணம் கடவுள் அவருக்குக் கொடுத்த சிறப்புச் சலுகை என்றே நாம் பேசுகின்றோம். நிச்சயமாக, இது உண்மை தான்.

அதேவேளையில், கடவுள் அன்னையைச் சிறப்பாக தேர்வு செய்ததால் மட்டும் அன்னை பெருமைக்குரியவராக திகழவில்லை. மாறாக, கடவுள் தந்த வாழ்வை சிறப்பாக வாழ்ந்து உலக மக்கள் அனைவருக்குமே முன்மாதிரியாக விளங்கியதால் சிறப்புப் பெறுகின்றார். எனவே, அன்னையைக் கொண்டாடி மகிழும் நாம் அன்னையைப் போற்றிப் பெருமைப்படுத்துவது மட்டும் போதாது, அன்னையின் முன்மாதிரியைப் பின்பற்றி நமது வாழ்வை அவரைப் போல வாழ்வதுதான் உண்மையில் அந்த அன்னைக்கு நாம் செய்யும் மரியாதை. அன்னையின் முன்மாதிரியான வாழ்வில் இருந்து நாம் கற்றுக்கொள்ள பாடங்கள் ஏராளம். இக்கட்டுரையில் இரண்டு கருத்துகளை மட்டும் பார்க்கலாம்.

1. அன்னை ஆண்டவருக்காக வாழ்ந்தார், அயலாருக்காக வாழ்ந்தார்.
2. அன்னை தன்னிலை உணர்ந்தார், தலைவனிடம் சரணடைந்தார்.

## 1. அன்னை ஆண்டவருக்காக வாழ்ந்தார், அயலாருக்காக வாழ்ந்தார்

முதலில் அன்னை ஆண்டவருக்காக வாழ்ந்தார். "ஆகட்டும்" என்ற ஒரு வார்த்தையின் வழியாக தன் வாழ்வையும் இதயத்தையும் அன்னை ஆண்டவருக்கு அர்ப்பணித்த நிமிடம் முதல் கடைசிவரை அன்னையின் இதயம் ஆண்டவருக்காகவே துடித்தது. ஆண்டவரையும் அவரது மீட்பின் வரலாற்று நிகழ்வுகளையும் மட்டுமே அவர் எப்போதும் தனக்குள் இருத்திச் சிந்தித்தார் (லூக் 2:19,51). எனவே அவரது இதயத்தில் இயேசுவுக்குத் தான் முதலிடம் இருந்தது. அவர் மகிழ்ந்தாலும் நாம் "என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம் மகிழ்கின்றது" (1சாமு 2:1) என்று சொல்லி ஆண்டவருக்காக மகிழ்ந்தார். கவலைப் பட்டாலும் "நானும் உன் தந்தையும் உன்னைக் கவலையோடு தேடினோம்" என்று சொல்லி ஆண்டவருக்காகக் கவலைப்பட்டார். அதனால்தான் செபமாலை அன்னை திருவிழாவில் நற்செய்திக்கு முன் வாழ்த்தொலியில் உள்ள வார்த்தைகள் பின்வருமாறு அமைகின்றன: "இறைவனை இதயத்தில் இருத்திச் சிந்தித்த மரியா பேறுபெற்றவர்".

இரண்டாவதாக அவர் அயலாருக்காக வாழ்ந்தார். எலிசபெத்து கருவுற்றிருக்கிறார் எனக் கேள்விப்பட்டதும் அவருக்கு உதவ விரைந்தார். கானாவூரில் திருமண வீட்டில் இரசம் குறைவுபட்டபோது அந்தக் குறையை சரிசெய்ய முயன்றார். இப்படி



ஆண்டவருக்காகவும் அயலாருக்காகவும் மட்டுமே அன்னையின் வாழ்வு அமைந்ததால் தான் இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் அவரது வாழ்வை முன்மாதிரியான வாழ்வு எனப் போற்றி விழா கொண்டாடுகிறோம்.

## 2. அன்னை தன்னிலை உணர்ந்தார், தலைவனிடம் சரணடைந்தார்

முதலில் அன்னை எப்போதும் தான் யார், தனது நிலை என்ன என்பதை முழுவதுமாக உணர்ந்திருந்தார். நற்செய்தி நூல்களில் அன்னைக்குப் பல பட்டங்கள் உண்டு. தந்தையால் அனுப்பப்பட்ட கபிரியேல் தூதர் கொடுத்த "அருள் நிறைந்தவர்" என்ற பட்டம், தூய ஆவியால் நிரப்பப்பட்ட எலிசபெத் கொடுத்த "ஆண்டவரின் தாய்" என்ற பட்டம், இயேசுவின் போதனையைக் கேட்ட மக்கள் கொடுத்த "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டிய தாய் பேறுபெற்றவர்" என்ற பட்டம்..... என பல பட்டங்கள் விவிலியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், அன்னை தனக்கென்று கொடுத்த பட்டம் ஒன்றே ஒன்று தான், அது "ஆண்டவரின் அடிமை" என்பது தான். ஒருமுறை அல்ல இருமுறை அன்னை இந்தப் பெயரால் தன்னை அழைக்கின்றார். மங்கள வார்த்தை நிகழ்வின் போதும் (நான் ஆண்டவரின் அடிமை), அன்னையின் பாடலின் போதும் (தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்) இதே பெயரைத் தமக்கென்று அன்னை கொடுத்துக் கொண்டார். இது அன்னை எப்போதும் தான் யார் என்பதை உணர்ந்திருந்தார் என்பதைக் காட்டுகின்றது.

இரண்டாவதாக, தான் யார் என்பதை உணர்ந்த அன்னை தன் தலைவராகிய கடவுளிடம் முழுவதுமாகத் தன்னையே சரணாகதியாக்கினார். "நீர் கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்" என்று தூதர் அறிவித்த போது உண்மையில் அன்னை உடைந்து போயிருப்பார். தன் எதிர்காலம் குறித்த கவலை அவரைச் சூழ்ந்திருக்கும். அதையும் ஏற்று மகனைப் பெற்றெடுத்த பின், பன்னிரண்டு வயதில் அவர் காணாமல் போனபோது மீண்டும் உடைந்து போயிருப்பார். அதே மகன் 33 வயதில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டபோது சுக்குநூறாக உடைந்திருப்பார். ஆனால் இவையனைத்தையும் தாண்டி எருசலேமின் மாடியறையில் சிதறுண்ட சீடர்களை ஒன்றிணைத்து தூய ஆவியாரின் வருகைக்கு ஒரு கருவியாக அவர் செயல்பட்டார் என்றால் காரணம் ஒன்றே ஒன்று தான்: "என் வாழ்வில் என்ன நடந்தாலும் பரவாயில்லை, நான் என்னை முழுவதும் ஆண்டவரிடம் ஒப்படைத்து விட்டேன், அவர் பார்த்துக் கொள்வார்" என்ற மனநிலை தான்.

அன்னையைக் கொண்டாடும் நாமும் அன்னையின் இந்தக் குணங்களைப் பின்பற்றினால் நமது வாழ்வும் முன்மாதிரியான வாழ்வாக அமையலாம். இன்றைய உலகம் சுயநல உலகம். தனக்கென்ன கிடைக்கும் என எதிர்பார்த்து தனக்காக மட்டுமே வாழும் மனிதர்கள் ஏராளம். இத்தகைய உலகில் ஆண்டவருக்காகவும், அயலாருக்காகவும் வாழ நாம் தயாரா? நமக்காகவும், நம் குடும்பத்துக்காகவும், நம் உறவுகள், நண்பர்களுக்காகவும் வாழ்வது எளிது. பிறருக்காக வாழ்வது கடினம். அன்னையின் மாதிரியைப் பின்பற்றி, ஆண்டவருக்காகவும் அயலாருக்காகவும் நாழ் வாழ வேண்டும்.

அதுபோல இன்றைய உலகம் தன்னைப் பெருமைப்படுத்தும் உலகம். இது என்னுடையது, இது நான் செய்தது, நான் மட்டும் இல்லைன்னா இதெல்லாம் நடந்திருக்காது என்று தம்பட்டம் அடிக்கும் மனிதர்களுக்கு நடுவே நான் வெறும் கருவி தான், கடவுள்தான் எல்லாவற்றையும் செய்தார் எனச் சொல்லி தன்னிலை உணர்ந்து, தலைவனிடம் சரணடைய வேண்டும் என அன்னை நமக்கு முன்மாதிரி காட்டுகின்றார். நம் வாழ்வின் முன்மாதிரியாக அன்னையை ஏற்போம். அன்னையின் வாழ்வைப் பின்பற்றி நமது வாழ்வையும் முன்மாதிரியாக மாற்றுவோம்.



அருள்பணி. சந்தியாகு





# முளையிலேயே கிள்ளி எறியப்பட்ட கனவுப் பூக்கள்

ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய சேரிப் பகுதியான **மும்பை தாராவியைக் கடந்து** கார் புறநகர்ப் பகுதியான வசையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அதனுள் பின் இருக்கையில் அமர்ந்திருந்தார் நிர்மல். அவரது எண்ண ஓட்டங்கள் சற்றே பின்னோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

★ ★ ★

"என்னப்பா நிர்மல் ஏதோ வெளிமாநிலத்தில் வேலை பார்க்கிறாயாமே? அதுவும் ஊரைவிட்டு ஒதுங்கிய பகுதியில் உள்ளுரில் வேலை கிடைக்கவில்லையாக்கும்?" ஊர்த் திருவிழாவிற்கு வந்த இடத்தில் உறவினரின் அங்கலாய்ப்பு!

"ஆமாம் மாமா, நான் படித்த படிப்பிற்கு அங்கேதான் வேலை. சம்பளமும் சற்று அதிகமாகக் கிடைக்கும்"

"உள்ளுரில் பத்தாயிரம் கிடைத்தால் போதாதாக்கும். வெளிமாநிலத்தில் காசுக்காக இப்படி உடலை வறுத்திக் கொள்ளனுமாக்கும்?"

"வேற வழியில்லை மாமா. இன்னும் கொஞ்சகாலம் அங்கேயே ஓட்டிக் கொள்ள வேண்டியது, இரண்டு மூன்று ஆண்டுகள் அனுபவம் பெற்ற பின்னர் வேறு நல்ல நிறுவனத்தில் வேலை தேட வேண்டியதுதான்"

நிர்மல்ராஜ் ஒரு சிறந்த தொழிலாளி. எப்போதும் வேலையிலேயே கவனம் செலுத்தக் கூடியவர். ஆனால் அவர் படித்த படிப்புக்கு மும்பை நகரில்தான் வேலை கிடைத்தது. அதுவும் நகரத்தை விட்டு வெகு தூரத்தில் அந்த நிறுவனம் அமைந்திருந்தது. தனது அறிவுக் களஞ்சியத்தால் வெகுவிரைவில் உயர்ந்த நிலைக்கு வந்துவிட்டார்.

எல்லாரையும்போல வேலையில் சேர்ந்ததும் அப்படி இருக்கவேண்டும், இப்படி இருக்கவேண்டும். கிராமத்தில் இருக்கும் படிப்பறிவில்லாத அப்பா அம்மாவை தன்னுடன் வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தார். எல்லாம் நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது. உறவினர்களின் தொல்லை ஆரம்பமானது. பையனுக்கு இன்னும் திருமணம் செய்து வைக்கவில்லையே என்று புலம்ப ஆரம்பித்தனர். எனவே பெண் பார்க்கும் படலம் ஆரம்பமானது.

உறவினர்கள் சிபாரிசு செய்த பெண்ணைப் பேசி திருமணம் செய்து வைத்தார்கள். பெண்ணுக்கு அப்பா, அம்மா கிடையாது. கப்பலில் தலைமை மாலுமியாக பணியாற்றியவர், கப்பலில் பணியிலிருக்கும் போதே மாரடைப்பு வந்து இறந்துவிட்டார். கணவர் இறந்த அதிர்ச்சியின் தாக்கத்தில் தொடர்ந்து வந்த ஆண்டில் அவரது மனைவியும் இறந்துவிட்டாராம்.

தனக்கொரு வாழ்க்கை அமையப் பெற்றதும், கிராமத்தில் இருந்த பெற்றோரை, தான் முதலில் தனியாகத் தங்கியிருந்த பகுதியில் வீடு பார்த்து அவர்களைத் தன்னோடு குடியமர்த்த நினைத்து புதிதாக இணைந்துள்ள மனைவியிடம் தெரிவித்தான். முதலில் ஒன்றிரண்டு மாதங்கள் சோதனைக்காக தன்னோடு அழைத்து வந்தான். முதலில் பெற்றோரில்லாத பெண்



என்பதால் மகளைப் போன்று பாசம் காட்ட ஆரம்பித்தனர். ஆனால், போகப்போக சம்பாதிக்கும் தங்கள் மகனை அவள் வளைத்துப் போட்டுவிடுவாளோ என்று மகன் இல்லாத சமயங்களில் முணுமுணுக்க ஆரம்பித்தனர்.

தொடக்கத்தில் அமைதியாக இருந்தவள், போகப்போக தாங்கமாட்டாமல் தன் கணவனிடம் அவர்களது புகையை ஊத ஆரம்பித்தாள். சரியாகிவிடும் என்று நினைத்தவன் பெற்றோரின் புகைச்சல் பகையாகிப் போகவே தன்னுடன் பணியாற்றிய நெருங்கிய நண்பன் அமலனின் யோசனைப்படி தன் பெற்றோரை கிராமத்திலேயே தங்க வைத்துவிட்டான். ஆண்டுக்கு ஒருமுறை ஊர்த் திருவிழாவிற்கு மனைவியுடன் சென்றுவர ஆரம்பித்தான். பெற்றோருக்குப் பயணம் பிடிக்காது என்பதால் அவர்களைத் தங்களோடு வெளிமாநிலத்தில் பாதுகாப்புடன் வைக்க இயலாது என்று உறவினர்களிடமும் நண்பர்களிடமும் சொல்லிச் சமாளித்தான்.

★ ★ ★

கார் நின்ற அதிர்வில் நினைவு பெற்றவராக நிறுவனத்திற்குள் நுழைந்தார். அங்கே நிறுவனத்தின் இந்திய அளவு முதன்மை அதிகாரியிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

"நிர்மல் உங்கள் சொந்த ஊருக்கு அருகாமையில் உள்ள மற்றொரு நிறுவனத்தை நாம் வாங்கியுள்ளோம். எனவே நீங்கள் அதற்குத் தலைமை அதிகாரியாகப் பணியாற்றினால் என்ன என்று தோன்றியது. உங்கள் அபிப்பிராயம் எப்படி?"

"வேண்டாம் சார். இந்த மும்பைப் பகுதியில் உள்ள பிரிவிலேயே பணியைத் தொடரலாம் என்று நினைக்கிறேன்"

"ஏன் அப்படி? எல்லாரும் சொந்த ஊரில் பெற்றோர், உறவினர், நண்பர்கள் புடைசூழத்தானே இருக்க விரும்புவார்கள்?"

"இல்ல சார். தூர இருந்தால்தான் குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படாமல் சுமுகமாகச் செல்கிறது. ஏற்கனவே ஒன்றிரண்டு மாதங்கள் பட்ட அனுபவங்களால்தான் இந்த முடிவிற்கு நான் வரவேண்டியதுள்ளது. தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள் சார்."

"ஓகே! உங்கள் விருப்பம். அதற்கு மாற்றாக வேறு நபரை ஏற்பாடு செய்து கொள்கிறேன். எப்ப உங்களுக்கு அங்கே போக விருப்பமோ, அதாவது உங்கள் குடும்ப சூழ்நிலை சரியாகுமோ அப்போது உடனடியாக என்னிடம் தெரிவித்துக் கொள்ளுங்கள். ஆல் தி பெஸ்ட்."

நிர்மலின் கனவுகள் விதைக்கப் படவில்லை, புதைக்கப்பட்டு விட்டன.



ம. வெனான்சியஸ்

## செபிக்கின்றோம்

### இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 11. | மார்னிங் ஸ்டார் | சுந்தரம் | 03.04.2026 | மிக்கேல் அதிதூதர் |
| 12. | ரமணி | டோமினிக் | 12.04.2026 | தஸ்நேவிஸ் மாதா |
| 13. | எமிலி வாஸ் | தாமஸ் வாஸ் | 26.04.2026 | காவல்தூதர் |
| 14. | செல்வகுமார் | வலன்டின் | 28.04.2026 | வியாகுல மாதா |





# விவிலியப் போட்டி 133

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**மாற்கு நற்செய்தி அதிகாரம் 1 முதல் 5 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

## I. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | யோவான் | - | மீனவர்கள் |
| 2. | தலித்தாகூம் | - | யோவான் |
| 3. | மாற்கு | - | பெருங்கிளைகள் விடும் |
| 4. | பெயல்செபூல் | - | மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே |
| 5. | சீமோன், அந்திரேயா | - | மரியா |
| 6. | தண்ணீரால் திருமுழுக்கு | - | ஒட்டகமுடி ஆடை |
| 7. | கடுகு விதை | - | எழுந்திடு |
| 8. | முடக்குவாதமுற்றவர் | - | மறைநூல் அறிஞர் |
| 9. | தீய ஆவிகள் | - | இறைமகன் நீரே |
| 10. | ஓய்வுநாள் | - | கப்பர்நகும் |

## விவிலியப் போட்டி 132

**ஏப்ரல் 2026** — *விடைக்குறிப்புகள்*

**மத்தேயு நற்செய்தி அதிகாரம் 21 முதல் 28 வரை**

| | | |
|---|---|---|
| 1. | யூதாசு | 27:4 |
| 2. | முன்மதியுடையோர் | 25:4 |
| 3. | விடுவித்தருளும் | 21:9 |
| 4. | மகதலா மரியாவும் வேறொரு மரியாவும் | 28:1 |
| 5. | தொழுநோயாளர் சீமோன் | 26:6 |
| 6. | இறைவேண்டலின் | 21:13 |
| 7. | ரபி வாழ்க | 26:49 |
| 8. | தூய ஆவியார் | 28:19 |
| 9. | பரபா | 27:16 |
| 10. | கடவுளுக்கும் | 22:21 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.05.2026**

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**63831 98510** (வாட்ஸ் அப் மட்டும்) — அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.

**வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.**

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*



**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 209**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**
**சரியான விடை எழுதியவர்கள் : 120**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 5**

| | | |
|---|---|---|
| 1. | காவல் தூதர் அன்பியம் | **ஹோ ட்ரினிஷா** |
| 2. | குழந்தை திரேசா அன்பியம் | **கிறிஸ்டி லிஸ்டன்** |
| 3. | லூர்து மாதா அன்பியம் | **ஆலிவர் வி. ராயர்** |
| 4. | பனிமயம் அன்பியம் | **ஜாக்குலின் வினோதினி** |
| 5. | பவுலடியார் அன்பியம் | **ஒபிலியா தாமஸ்** |

**பாராட்டுக்குரியவர்கள் : 115**

**அந்தோனியார் அன்பியம்**
6. பிருந்தா
7. ரீனா மொறாயிஸ்
8. ஜெயா
9. லீனா கருணா
10. ஜெசி
11. சரோஜா மஸ்கரனாஸ்

**அன்னை தெரசா**
12. ஜூலியட்ஸ் ரூபி

**அன்னை வேளாங்கன்னி**
13. டென்சி
14. கவாஷினி ஆல்வின்
15. ஜெரினா செல்வம்
16. நான்சி
17. பிரவீனா ரவிக்குமார்
18. அலைனா சந்தலேனா
19. லிசியா ஜெகதீஷ்
20. மிஷல் மிரல்

**கிறிஸ்தரசர்**
21. ரெக்ஸ் கிரீன்வெல்
22. லூரட் வசந்த்
23. ஜாய் ரோச்
24. ஜீலியட் சாவியோ
25. செலஸ்கி கிளமென்ட்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
26. சுகன் மோனிஷா
27. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
28. ராஜா ஜரின்
29. சுரேஷ் பிரேமா
30. டாரல் தீத்தோனிஸ்

**திவ்யபாலன் அன்பியம்**
31. ஸ்டார்லக் ஏஞ்சலின்
32. சென்சிலா சகாயராஜ்
33. பிரின்சி
34. சகாயராணி தனராஜ்

**பாத்திமா மாதா**
35. சுகந்தா ஸ்டெனி
36. பிச்சம்மாள்
37. அனு ஆல்வின்
38. ரீனா ராஜா
39. லிண்டா சீலன்
40. ஜெனிட்டா மைக்கல்
41. ஸ்டெபி ரீகன்

**இரக்கத்தின் மாதா**
42. சேவியர் அம்மாள் கோமஸ்
43. பிரைட்டன் ஜெரோபின்
44. சித்ரா மோத்தா
45. பாப்டிஸ்டா
46. செல்வி புரோ
47. இருதயம்மாள் கொன்சால்
48. சகாயராணி

**ஜெபமாலை மாதா**
49. சகாயம்மாள் பெனடிக்ட்
50. கல்யாணி செல்வராஜ்
51. சேவியர் ஏஞ்சல்
52. மேகலா ஜெகன்

**ஜூடு அன்பியம்**
53. டெரன்சியா அரிஸ்டோ
54. கிறிஸ்டோ ஜெபினா

**காவல்தூதர்**
55. ஜூலியஸ் தல்மேதா
56. அல்பின்
57. ரஸ்கின் வசந்தா
58. செல்வராணி
59. சாந்தி ஆல்ட்ரின்
60. எலிஜா இம்மானுவேல்
61. வெனிட்டாள்
62. ஜெயா அகஸ்டின்
63. பிரிசில்லா

**குழந்தை தெரசா**
64. பெர்லி டென்சன்
65. பெனி முறாய்ஸ்

**குழந்தை இயேசு**
66. மோனிகா செபஸ்டின்
67. எமல்டா
68. சுகிர்தா
69. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா**
70. ரொசாரி கோமஸ்
71. வெர்ஜினியா
72. லீமா ரோஸ் ஜாய்
73. ஹெபிட்டா
74. சகாயராஜா சகாயராணி

**லூர்து மாதா**
75. ஜெனோ சேவியர்
76. பிலோ கோமஸ்
77. ரஜூலா ஜான்போஸ்கோ
78. சாண்டினா
79. லூர்து லினட்

**மிக்கேல் அதிதூதர்**
80. ஜோஸ்பின் பர்னாந்து

**பனிமய அன்பியம்**
81. சுரேஷ் ஆனி
82. ராணி
83. ஜூடு ரதி
84. அந்தோணிசாமி

**பவுலடியார்**
85. ராஜா ரோஸ்லின்

**பரிபூரண மாதா**
86. சப்னா கினிஸ்டன்

**பொம்பெய் மாதா**
87. லூடா கான்ஸ்டன்
88. அண்டோ எல்ஃபினா
89. தெரசா பிரகாஷ்
90. டிரைபேனா
91. மேத்யூ கர்டோசா
92. சித்ரா அலாய்
93. டிஃபானி அண்டோ

**இராயப்பர்**
94. டெய்ஸி
95. நேவிஸ் அம்மாள்
96. போஸ்கோ ரெனோ
97. ரொமில்டா வெனான்சிஸ்

**சவேரியார்**
98. டெலிலா அமலன்
99. அனுஷியா பீட்டர்
100. ஜோர்னல் ஜென்ஸி
101. ஜாஸ்மிலின் அல்டோ சாலமோன்

**செபஸ்தியார்**
102. ஜெஸிலா சேவியர்
103. அந்தோனியம்மாள் டென்சிங்
104. பிரவீனா

**சிந்தாயாத்திரை மாதா**
105. ஜூடி ஆரோக்கியராஜ்
106. டோனஸ் ராயன்
107. லாசர் செல்வி
108. நேசம்

**சிறுமலர் அன்பியம்**
109. எல்சிட்டா ஆனந்தன்
110. விஜிலியா
111. தாயம்மாள்
112. விஜி சகாயராஜ்

**சூசையப்பர்**
113. ஹேமலதா சேவியர்
114. மென்சி
115. கிறிஸ் ரீஜோ
116. கிரேஸ்லின்

**திருச்சிலுவை**
117. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
118. ரமணி டிவோட்டா
119. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
120. ஜெரிஷா

## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 89

**பரிசு பெறுபவர்கள் : 3**

121. சென்னை — ஜெரால்ட் ஜோதி
122. திரு இருதயங்களின் பேராலயம் — டீனுராயப் ஜேசுபாலு
123. குரூஸ்புரம் — ஜான்சி மென்டிஸ்

## பாராட்டுக்குரியவர்கள் : 86

**சென்னை**
124. ரெஜினா கிரகோரி
125. மேமா ஸ்டீபன்
126. கமலஜோதி ஜெயசீலன்
127. ஆண்டனிகா ஷெர்லி
128. பிரேமா குணசீலன்
129. டெனிசா கிளாட்

**கொடைக்கானல்**
130. ஜெஸிந்தா மார்ட்டின்

**மதுரை**
131. சகோ. ஜான்சி மேரி
132. சகோ. கீர்த்தனா ரூத்

**திருச்சி**
133. மோனிட்டா கிறிஸ்டி
134. மேத்யூ விவேக்
135. டோனி
136. பிரின்ஸ் ஜெரோம் ஜோசப் ராஜ்

**திருப்பூர்**
137. பிரான்சிஸ் ஆர்லன்
138. ததேயூஸ் கரோலின்;

**நெய்வேலி**
139. ஜோசப்

**ஆறுமுகநேரி**
140. ஜெயராணி
141. தொம்மை அந்தோணி

**ஆலந்தலை**
142. பொன்சேகா தங்கராஜ்
143. மரியம்மாள்

**தருவைக்குளம்**
144. லில்லி சோபியா
145. ஜோஸ்பின் ஷீலா
146. மைக்கேல் ஸ்டிபானி

**கோவில்பட்டி**
147. பிரவீன்குமார்

**கயத்தார்**
148. அமல்ராஜ்

**கடலூர்**
149. ஹென்றி தாஸ்

**வீரபாண்டியபட்டணம்**
150. சாந்தினி ரேச்சல்

**உவரி**
151. ஆர்லின் ஈவ்லின்

**உடன்குடி**
152. ஸ்நோவின்

**புதியம்புத்தூர்**
153. ஹெலன் அன்னமணி

**சூலூர்**
154. சத்யா சேவியர்

**சருகணி**
155. சகோ. பெரைறா

**சங்கரன்கோவில்**
156. செல்வமேரி

**உத்தமபாளையம் / தேனி**
157. கரோலின் பெலவேந்திரன்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இருதயங்களின் பேராலயம்**
158. ரமோலா கமிலஸ்
159. கிரேட்டா ராஜா
160. பீட்டர் ஜெயந்தி
161. பெஸ்டஸ் மச்சாடோ
162. ஜெயா ஃபெலிக்ஸ்
163. ஸ்நோசன்
164. ஜோக்கின் கிசிங்கிளி

**குருஸ்புரம்**
165. ஆசிர்வாதம்
166. பௌவுசி ஜோ மைக்கேல்
167. பிளாசி செல்வராஜன்
168. மாசில்லா
169. மெர்சி ஜெரால்ட்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
170. டார்லிமா அமுதன்
171. டோமினிக்
172. சகாயம்

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
173. சலேத் எலிசா
174. செக்கரியா சாமுவேல்
175. குரூஸ் ஷாலினா

**யூதா ததேயு கோவில்**
176. ஜூடி ரீத்தம்மாள் மேரி
177. ரோஸ் சேவியர்
178. இம்மானுவேல் சேகர்
179. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்
180. ஜெனட் சேவியர்
181. ஆரோக்கிய சர்மிளா
182. சகாய மேரி

**அந்தோணியார் கோவில்**
183. இருதயம்மாள் கபிரியேல்
184. வயோலா ஜான்சன்
185. மென்சிலா லொயோலா
186. டயானா வினோத்
187. மகேஷ் சுஜாதா காந்திநகர்
188. ரியாலினோ
189. கிளமென்சியா மேக்டன்
190. செலஸ்டின்
191. பிண்டன் சோபியா
192. லிபியா பிராங்ளின்
193. சாந்தினி
194. மரிய சகாய செலஸ்டின்

**அண்ணா நகர்**
195. வென்சி ராணி

**சார்லஸ் கோவில்**
196. சகாயிட்டா மச்சாது
197. அல்போன்சா பர்னான்டோ
198. ரூபி ஏஞ்சல்

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
199. சூசை நெவின்
200. சகோ. மரிய சூசை ரூபி
201. பாத்திமா ஏஞ்சலின்
202. சகோ. லோரா மேரி

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
203. வெர்ஜின்
204. தயாபர ராணி

**திரேஸ்புரம்**
205. கோல்வின் ஜேசுராஜ்
206. ஸ்நோ வெண்பா
207. கிருபா

**பாத்திமா நகர்**
208. ஷர்மிளா ரமேஷ்
209. மேரி ஹம்லின்



**கடந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 216**
**இந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 209**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 22)

## மே 2026

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

### நிகழ்ந்தவை

★ **புனித வாரத்தை முன்னிட்டு** 30.03.2026 மற்றும் 01.04.2026 இரு நாள்களிலும் மாலைத் திருப்பலி முடிந்ததும் ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்பட்டது.

★ புனித வியாழன் (02.04.2026), புனித வெள்ளி (03.04.2026) மற்றும் உயிர்ப்பு ஞாயிறு (05.04.2026) ஆகிய மூன்று நாள்களில், புனித வாரத் திருநிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. திருவழிபாட்டு நிகழ்வுகள் ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், யாழ், சூர்யா தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டன.

★ பனிமய அன்னைக்கு மக்கள் காணிக்கையாகத் தந்த தங்க நகைகளை உருக்கி 16 பவுனில் ஒரு **தங்க செயின்** செய்யப்பட்டு, **05.04.2026 உயிர்ப்புப் பெருவிழா** அன்று அன்னைக்கு அணிவிக்கப்பட்டது.

★ **06.04.2026 உயிர்ப்புத் திங்கள்** அன்று மாலை பங்கின் அனைத்து இல்லங்களும் அருள்பணியாளர்கள், அருள்சகோதரர்களால் பாஸ்கா புனித நீரால் புனிதப்படுத்தப்பட்டன.

★ **12.04.2026 ஞாயிற்றுக்கிழமை** “திருமண வரனுக்காக, குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்காக” நோன்பு வழிபாடு **அருள்பணி. குமார்ராஜா** அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

★ **19.04.2026** அன்று நமது பேராலய வளாகத்திலுள்ள அந்தோனியார் அரங்கத்தில் காலை 10.00 மணி முதல் பகல் 01.00 மணி வரை உயர்கல்வி, தொழில் வாய்ப்பு, எதிர்கால திட்டமிடல் குறித்த வழிகாட்டுதல் முகாம் (Career Guidance) நடைபெற்றது.

### நிகழ இருப்பவை

★ 01.05.2026 வெள்ளிக்கிழமை முதல் 10.05.2026 ஞாயிற்றுக்கிழமை வரை 10 நாள்கள் நமது பங்கில் விடுமுறை விவிலியப் பள்ளி நடைபெறும்.

★ **01.05.2026 மாதத்தின் முதல் வெள்ளி** நோயாளர்கள், முதியோருக்கு இல்லங்களில் திவ்விய நற்கருணை வழங்கப்படும்.

★ **02.05.2026 மாதத்தின் முதல் சனி** மாலையில் சப்பரப் பவனியும், நவநாள் வழிபாடும் நடைபெறும்.

# நினைவு அஞ்சலி

ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாய் திகழ்வாய்.
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாகவும் இருப்பாய்

(எசாயா 62:3)

| 9ஆம் ஆண்டு | 10ஆம் ஆண்டு |
|---|---|
|  |  |
| | ஆசிரியர் |
| **O. நியூமன்** | **N. பிரான்சினா** |
| வயது : 70 | வயது : 34 |
| மண்ணுலகில் 23.12.1954 \| விண்ணுலகில் 11.06.2017 | மண்ணுலகில் 16.05.1992 \| விண்ணுலகில் 31.09.2016 |

காற்றோடு கலந்த பாசம்
கண்ணீரோடு வடிந்த பாசம்
உலகினை கடந்து போனாலும்
எங்கள் நினைவுகளில்
என்றும் உயிரோடு வாழ்கிறாய்!


**நீங்கா நினைவுகளுடன்**

அம்மா : புரோசிட்டா
அண்ணன் : பிராங்லின்   அண்ணி : லிப்பியா
பேரன், பேத்தி : கிறிஸ்டியானோ, பிரான்சி

# நினைவு அஞ்சலி

நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன (சாஞா 3:11)

**45ஆம் ஆண்டு** | **25ஆம் ஆண்டு**



## திமோத்தி கொரைரா

வயது : 69

மண்ணில் 10.03.1912 | விண்ணில் 24.06.1981



## அருள்சீலி பர்னாந்து

வயது : 73

மண்ணில் 19.06.1928 | விண்ணில் 28.04.2001

இறைவா, நித்திய இளைப்பாற்றியை
இவர்களுக்கு அளித்தருளும்.
முடிவில்லா ஒளி இவர்கள்மேல் ஒளிர்வதாக.
இவர்களது ஆன்மா சாந்தி பெறுவதாக!

**பிரிவால் துயருறும்**

**மகன், மகள், மருமகன், மருமகள்,**
**பேரன்கள், பேத்திகள், பூட்டன், பூட்டிகள்**

40, மரக்குடி தெரு, தூத்துக்குடி – 1.

“உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்”
(யோவான் 11:25)



## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

# M. BASALIAMMAL CARDOZA

**Born** 1928

**Died** 20.05.2011

## 17ஆம் ஆண்டு நினைவு

### 100ஆம் ஆண்டு பிறந்த நாள் நினைவு

# S. THOMMAI ANTONY FDO

**Born** 1926

**Died** 11.07.2008





## 6ஆம் ஆண்டு நினைவு

# T. WILLINGTON

**Born** 21.07.1950

**Died** 06.09.2019

பிரிவால் துயருறும்

மகன்கள், மகள்கள், தம்பிகள், தங்கைகள்
மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள்
கொள்ளு பேரன், கொள்ளு பேத்தி

SHINY Ph : 98421 31493